**11.09.2023.**

**<u>LAOP No.54/2023</u>**

**CW.1 - Krishnan**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2-வது கோருரிமையாளர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இம்மனு குறிப்பிடும் சர்வே எண்.497 ல் கண்டுள்ள நிலம் பர்கூரில் உள்ளது என்றால், சரிதான். அதில் எனது குடும்பத்திற்கு 1 ஏக்கர் 70 சென்ட் பாத்தியமானது என்றால், சரிதான். அதை தான் 1969 ம் வருடம் நானும் எனது தம்பியும் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால், சரிதான். எனக்கு 1 ஏக்கர் 15 சென்ட் வந்தது என்றால், சரிதான். எனக்கு கொடுக்கப்பட்ட பகுதிக்கு வடக்கில் எனது தம்பி சொக்கலிங்கத்திற்கு 55 சென்ட் பாகமாக கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். எங்கள் நிலத்திற்கு தெற்கில் மேய்ச்சலுக்கு கால்நடைகளை கொண்டு செல்லும் O.D. (வழிப்பாதை) உள்ளது என்றால், சரிதான். என் தம்பிக்கு ஒதுக்கப்பட்டிருந்து எங்கள் நிலத்தின் பகுதிக்கு வடக்கே வேறு நபருக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளதென்றால் சரிதான். எங்கள் நிலத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சர்வே எண்.496/1 ல் கண்ட நிலம் வேறு நபருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். எங்கள் நிலத்திற்கு கிழக்கே சென்னம்மாளுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளதென்றால், சரிதான். சர்வே எண்.497 ல் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 64 சென்ட் என்றால், சரிதான். யு.டி.ஆர். பட்டா கொடுத்த போது நிலத்தின் வடக்கு பகுதிக்கு சர்வே எண்.497/1 என்றும், தெற்கு பகுதிக்கு சர்வே எண்.497/2 என்றும் கொடுக்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.497/1 ல் உள்ள நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 75 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண்.497/1 ன் தெற்குபுறத்தில் உள்ள நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 87 சென்ட் என்றால், அதெல்லாம் எனக்கு தெரியவில்லை. என்னுடையதும், என் தம்பியுடையது மட்டும் தான் எனக்கு தெரியும். சர்வே எண்.497/1 ல் உள்ள நிலத்தின் பகுதியை தான் 4 வழிச்சாலை போடுவதற்கு நில ஆர்ஜிதம் செய்தார்கள் என்றால், சரிதான். 4 வழிச்சாலை போடுவதற்கு எங்கள் நிலங்களை ஆர்ஜிதம் செய்ததில் என் தம்பி

அவரது பங்கை பொறுத்து இழப்பீடு பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். எனக்கு எந்த இழப்பீடும் முதலில் கொடுக்கவில்லை என்றால், சாட்சி முதலில் தன் தம்பி தனக்கு கொடுத்ததாக சொன்னார். கூடுதலாக சாட்சி 2 வது முறை தனக்கு இழப்பீடு கொடுத்ததாக சொன்னார். முதல் முறை அரசு என் தம்பிக்கு இழப்பீடு கொடுத்த போது எனக்கு எந்த தொகையும் இழப்பீடாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி கூடுதலாக தான் அப்போது ஊரில் இல்லை என்றார். அப்போது நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தில் எனக்குரிய பங்கின் பகுதியும் உள்ளது என சொல்லி நான் இழப்பீடு எதுவும் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் தனியாக இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யவில்லை. ஆனால் என் தம்பி எனக்கு பணம் கொடுத்தார். அவ்வாறு என் தம்பி எனக்கு பணம் கொடுத்ததற்கு எழுத்து மூலமான ஆவணம் ஏதாவது எழுதி கொண்டோமா என்றால் இல்லை. நான் என் தம்பியிடம் பணம் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு பணம் எதுவும் என் தம்பியிடம் இழப்பீடாக நான் பெறவில்லை என்றால், சரியல்ல. சர்வே எண்.497/1 ல் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தில் எனது பங்கு நிலம் ஏதும் இல்லை என்றால், சரியல்ல. சர்வே எண்.497/1 ல் எனக்கு நிலம் உள்ளது என்று காண்பிப்பதற்கு கூட்டு பட்டா போன்ற ஆவணம் உள்ளதா என்றால், இல்லை. பாக பத்திரம் தான் உள்ளது. 2-வது கோருரிமையாளர் அசோகனுக்கு சர்வே எண்.497/1 ல் இருந்த 1000 ச.மீ. நில ஆர்ஜிதம் செய்ததற்கு இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால், தவறு. அவ்வாறு அசோகனுக்கு 1000 ச.மீ. இழப்பீடு கொடுத்ததற்கு ஆட்சேபணை கொடுத்தோமா என்றால், அவ்வாறு இழப்பீடே கொடுக்கப்படவில்லை. அசோகனுக்கு பாத்தியதை கிடையாது. அசோகனுக்கு நஷ்ட ஈட்டுதொகை கொடுக்கப்பட்ட விவரம் தெரியுமா, தெரியாதா என்றால், தெரியாது. நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது அசோகனுக்கு இழப்பீடு எதுவும் கொடுக்கப்படவில்லை என்றார். சர்வே எண்.497/1 ல் அசோகனுக்கு பாத்தியப்பட்ட 1000 ச.மீ. நில ஆர்ஜிதம் செய்த போது அது குறித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இழப்பீடு தொகை வழங்கப்பட்டது என்றால், அது பொய். சர்வே எண்.497/1 ல் யார் யாருக்கெல்லாம்

ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டது என்று தெரியுமா என்றால், எனக்கு கொடுத்தார்கள். நீதிமன்றம் குறிப்பாக கேட்ட போது தன்னை தவிர வேறு யார்யாருக்கெல்லாம் கொடுத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal District Judge,
Krishnagiri.